**நிலச்சரிவு அனர்த்த பாதுகாப்பு செயற்திட்டம் - 2018**

---

நிலச்சரிவு அனர்த்த பாதுகாப்பு செயற்திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்களின் கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மைக்கும் இடையே கைச்சாத்திடப்பட்ட எஸ்எல்-பி 109 ஆம் இலக்க 2013 மார்ச் 14 ஆந் திகதியிடப்பட்ட கடன் உடன்படிக்கையுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகள் மற்றும் அவதானிப்புக்கள் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

## 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

---

செயற்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், முன்னாள் துறைமுகங்கள், மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சாகவிருந்த தற்போதைய வீதி மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை செயற்திட்டத்தின் அமுலாக்கல் முகவராக உள்ளது. மத்திய, ஊவா மற்றும் சப்பிரகமுவ மாகாணங்களில் உயர் நிலப்பகுதிகளில் முறையான பாதுகாப்பு நடவடிக்கைகளை அமுலாக்குவதன் மூலம் அடிப்படை உட்கட்டமைப்பாக தேசிய வீதிகளை இலக்காகக்கொண்ட நிலச்சரிவு இடரை குறைப்பதற்கும் அதன் மூலம் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி என்பவற்றிற்கு பங்களித்து வீதி வலையமைப்புப் பாதுகாப்பினை முன்னேற்றி வீதிப் பாவனையாளர்கள் மற்றும் குடியிருப்பாளர்களை உள்ளடக்கிய மக்களின் வாழ்வாதரத்தை பாதுகாத்தல் செயற்திட்டத்தின் குறிக்கோளாக உள்ளது. கடன் உடன்படிக்கையின் படி செயற்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்த கிரயம் ரூபா 16,201.2 மில்லியனுக்குச் சமனான யூஎஸ் டொலர் 122.6 மில்லியனாக இருந்ததுடன் அதில் ரூபா. 12,870.45 மில்லியனுக்குச் சமனான யூஎஸ் டொலர் 97.4 மில்லியனை ப்பான் சர்வதேச ஒத்துழைப்பு முகவராண்மை வழங்குவதற்கு உடன்பட்டிருந்தது. மீதித் தொகை ரூபா 3,331 மில்லியன் இலங்கை அரசாங்கத்தினால் வழங்க எதிர்பார்க்கப்பட்டிருந்தது. செயற்திட்டம் அதனது நடவடிக்கைகளை 2017 மார்ச் 24 ஆந் திகதி ஆரம்பித்திருந்ததுடன் 2019 மார்ச் 21 அளவில் பூர்த்திசெய்வதற்குப் பட்டியல்படுத்தப்பட்டிருந்தது.

## 1.3 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

---

இந்த அறிக்கையின் 2.1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களிலிருந்து செம்மையாக்கல்களின் தாக்கத்தை தவிர்த்து, செயற் திட்டத்தின் 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாரா நிதி நிலைமையியும் நிதிச் செயலாற்றல் மற்றும் அதனது முடிவடைந்த ஆண்டிற்கான காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் அதனுடன் இனைந்த நிதிக் கூற்றுக்கள் என்பன இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க உண்மையானதும் நேர்மையானதுமான நிலைமை ஒன்றை தருகின்றது என்பது எனது அபிப்பிராயம் ஆகும்.

## 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

---

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக் கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்**

---

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கையில், கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலினை மதிப்பீடு செய்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். கருத்திட்டத்தினை கணக்கொழிப்பதற்கு முகாமைத்துவம் கருதுமாயின் அல்லது மாற்றீடு இல்லாதவிடத்து செயற்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தாலேயொழிய தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கருவின் அடிப்படையில் கணக்குகளை பேணுதல் மற்றும் கருத்திட்டத்தின் தொடர்ந்தியங்குவதற்குரிய விடயங்களை வெளிப்படுத்தல் என்பன முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறை தொடர்பான பொறுப்பு, அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களினால் ஏற்கப்படும்.

கருத்திட்டத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு அனைத்து வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக ஏடுகளும் அறிக்கைகளும் பேணப்படுதல் அவசியமாகும்.

**1.6 நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு தொடர்பான கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலொன்றைப் பெற்றுக்கொள்வது மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலொன்றாக இருந்த போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும் போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்களின் இல்லாமை என்பதன் உறுதிப்படுத்தலொன்றல்ல. மோசடி அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் இருக்க கூடியதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதார தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக கருத்தில் கொள்ளப்படல் வேண்டும்.

துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் என்னால் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போது சந்தர்ப்பத்திற்கு பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களினை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடியொன்று ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- முகாமைத்துவத்தால் பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகள் மற்றும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் நியாயமாகவும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளதா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வில் இனங்காணப்பட்ட முக்கியமான கணக்காய்வு கண்டுபிடிப்புகள் பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டு நலிவுகள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பாக உரிய உத்தியோகத்தருக்கு அறிவிக்கப்பட்டுள்ளது.

## 2. நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 2.1 நிதிக்கூற்றுக்களின் வெளிப்படுத்தல்கள்

| | கணக்கீட்டுக் குறைபாடுகள் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | 2018 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 02 ஒப்பந்ததாரர்களிற்கு செலுத்தவேண்டியிருந்த ரூபா 300,597 தொகையான பிடிகாசு கணக்குகளிங்கு கொண்டுவரப்பட்டிருக்கவில்லை. | நடைமுறை வேலை மற்றும் பொறுப்புக்களின் குறை மதிப்பீடு. | தவறினை சரிசெய்ய நடவடிக்கை எடுக்கப்படும். | வருட முடிவிலான செலுத்தவேண்டிய மீதிகள் நிதிக்கூற்றுக்களிற்கு எடுக்கப்படல் வேண்டும். |
| (ஆ) | ஒப்பந்ததாரர்களினூடாக செயற்திட்டத்தினால் பெறுகை செய்யப்பட்ட கணனி உபகரணம், அலுவலக உபகரணங்கள் மற்றும் மின் உபகரணங்கள் போன்ற சொத்துக்களின் பெறுமதி சிவில் வேலைகளின் கிரயத்திலிருந்து ஒதுக்கப்பட்டு வேறுவெறாக காட்டப்பட்டிருக்கவில்லை. | வெவ்வேறு ஆயுட்காலத்துடனும் வெவ்வேறு நோக்கங்களின் பயன்பாட்டிற்காகவும் நிர்மானிக்கப்பட்ட அல்லது பெறுகை செய்யப்பட்ட ஆதனங்களின் பெறுமதி வேறுவெறாக காட்டப்படவில்லை. | இது செயற்திட்டத்தின் நடவடிக்கைகள் பூர்த்தியாகும் நேரத்தில் சீராக்கம் செய்யப்படும். | வெவ்வேறு ஆயுட்காலங்களை கொண்ட சொத்துக்கள் வெறுவெறாக சமர்ப்பிக்கப்படல் வேண்டும். |

**3. பௌதீக முன்னேற்றம்**

**3.1 செயற்திட்ட நடவடிக்கைகளின் பௌதீக முன்னேற்றம்**

| நடவடிக்கை | 2018 திசெம்பர் 31 இல் உள்வாரான செயல்திறன் | | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள் | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|---|
| | எதிர்பார்த்த சதவீதம் | அடயப்பட்ட சதவீதம் | | | |
| ஒப்பந்தப்பொதி 01 இன் கீழான பாதுகாப்பு நடவடிக்கைகளின் நிர்மான வேலைகள். | 75.5 | 47.1 | பாதிக்கப்படக்கூடிய பகுதிகளில் மண்சரிவிற்கான அபாயம். | வேலைகளை பூர்த்தியாக்குவதற்கு கால நீடிப்பு வழங்கப்பட்டுள்ளது. | சாத்தியமான ஆபத்துக்களை தவிர்க்க வேலைகளை துரிதப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படல் வேண்டும். |

**3.2 ஒப்பந்த நிர்வாகம்**

| | கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|---|
| (அ) | பாதுகாப்பு நடவடிக்கைககள் ஆரம்ப கட்டத்தில் செயற்திட்டத்தினால் அடயாளப்படுத்தப்படாத அம்பேபுஸ்ஸ எனும் இடத்தில் ரூபா 243 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்தில் மீளாய்வாண்டின் போது ஆரம்பிக்கப்பட்டிருந்தது. | ஆரம்ப வேலைப்பரப்பிலிருந்து விலகல். | அவசர வேலையின் தன்மை காரணமாக, உரிய வேலைகள் செய்யப்பட்டிருந்தன. | பாதிப்படையக்கூடிய இடங்கள் மீதான மண்சரிவினை முறையாக அடையாளப்படுத்த வேண்டியதுடன் வேலைகள் முன்னுரிமைப்படுத்தப் படலும் வேண்டும். |
| (ஆ) | ஒப்பந்தப்பொதி – 01 இன் கீழான பாதுகாப்பு நடவடிக்கை வேலைகளை பூர்த்தியாக்குவதற்கான காலநீடிப்பு 2019 மார்ச் 30 இல் உள்ளவாறு பூர்த்தியாக்க பட்டியலிடப்பட்டிருந்த செயற்திட்ட காலப்பகுதியினை மிஞ்சி 2019 ஒக்டோபர் 24 வரை வழங்கப்பட்டிருந்தது. | இலங்கை அரசாங்கத்திற்கு மேலதிக கிரயம். | கால நீடிப்பு ஒப்பந்த நிபந்தனைகளின் பிரகாரம் வழங்கப்பட்டுள்ளது. | செயற்திட்ட காலப்பகுதிக்குள் பூர்த்தியாக்க பாதுகாப்பு நடவடிக்கை வேலைகளை துரிதப்படுத்தல் வேண்டும். |

### 3.3 சச்சரவுத்தன்மையான விடயங்கள்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| கடுகன்னாவையில் வீதி அபிவிருத்தி அதிகார சபையின் நிறைவேற்று பொறியியலாளர் அலுவலகத்தின் மண்சரிவு பாதுகாப்பு நடவடிக்கை கருவி பிரிவின் நிறுவுதலிற்கான அலுவலக கட்டிடத்தினை சீரமைப்பதன் மீதான ரூபா 48 மில்லியன் மதிப்பிடப்பட்ட கிரயத்திலான வேலைகள் ரூபா 127.75 மில்லியன் கிரயத்தில் பூர்த்தியாக்கப்பட்டிருந்தது. | முறையற்ற மதிப்பீடுகளின் தயாரிப்பின் காரணமாக மேலதிக கிரயங்கள் ஏற்பட்டன. | வடிவமைப்புக்களின் மாற்றங்களின் பிரகாரம், கிரய அதிகரிப்பொன்று காணப்பட்டது. | மதிப்பீடு மற்றும் அமுல்படுத்தல் மீதான கட்டுப்பாடுகள் பலப்படுத்தப்படல் வேண்டும். |

### 3.4 முறைமை மற்றும் கட்டுப்பாடுகள்

| கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் கருத்துரைகள | கணக்காய்வாளர் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| மத்திய மாகாணத்தலுள்ள கொத்மலேகம, சப்பிரகமுவவிலுள்ள இம்புலுவே மற்றும் ஊவா மாகாணத்திலுள்ள லுனுகல மற்றும் வல்ஹபுதென்ன ஆகியவற்றில் பூர்த்தியாக்கப்பட்ட வேலைகள் பூர்த்திசெய்யப்பட்டு 2018 திசெம்பர் 31 உள்ளவாறு வீதி அபிவிருத்தி அதிகார சபையினால் எடுக்கப்பட்டமை அவதானிக்கப்பட்டது மேலும் மண்சரிவின் மீதான சாத்தியமான ஆபத்தினை மீளாய்வு செய்யவும் கண்கானிக்கவும் செய்யப்பட்ட நிர்மான வேலைகளை பராமரிக்கவும் எவ்வித நடைமுறைகளும் நிறுவப்படவில்லை. | நடவடிக்கை எடுக்கப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகளின் பேண்தகமை மீது ஆபத்துக்கள். | வீதி அபிவிருத்தி அதிகார சபையின் மாகாண உத்தியோகத்தர்களால் நடவடிக்கை எடுக்கப்படும். | பாதுகாப்பு நடவடிக்கைளின் வினைத்திறனை மீளாய்வு செய்து கணகாணிக்க நடைமுறைகளை பலப்படுத்த வேண்டும். |